# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1929/7 - 2015 අගෝස්තු මස 24 වැනි සඳුදා - 2015.08.24

*1929/7 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ. பீ. 94/47* (vi)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும், 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான் இக்கட்டளையின் மூலம் -

(அ) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டும் என்பதுடன் "பதுளை கதிர்காமத் தேவாலயப் புனித பூமி" என அழைக்கப்படுதலும் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன் ;

(ஆ) "பதுளை கதிர்காமத் தேவாலயப் பூனித பூமி" ஆக வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்பு தொடர்பிலும் உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென பணிக்கின்றேன்.

ரணில் விக்ரமசிங்க,
கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்,
இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்,
இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.
கொழும்பு,
2015, யூலை 17.

**அட்டவணை**

பதுளை கதிர்காமத் தேவாலயப் புனித பூமி பிரதேசத்தைக்
கொண்டிருக்கும் காணி இடப்பரப்பு

நில அளவையாளர் நாயகத்தின் 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதிய பி. ஏ. 621 ஆம் இலக்க, ஆரம்பத் திட்ட வரைபடத்தில் காணித்துண்டு இல. 1 மற்றும் இல. 2 எனக் காட்டப்பட்டுள்ள, ஊவா மாகாணத்தின் பதுளை நிர்வாக மாவட்டத்தின் பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் றில்பொலக் கோறள சிறு பிரிவிலுள்ள பதுளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவின், பதுளை நகரக் (பகல வீதி) கிராமத்தில் அமைந்துள்ள 0.5366 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்டதுமான காணி இடப்பரப்பு, இது பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

**காணித்துண்டு இல. 1 :**

வடக்கு : பூங்கா, பஞ்சதுறயாகே வத்த அல்லது குணந்தரகே வத்த, பதுளை தபால் அலுவலகம், பதுளை ஆரம்பத் திட்ட வரைபடம் 488 இல் காணித்துண்டு இல. 2 தேவாலவத்த, பஞ்சதுறயாகே வத்த அல்லது குணந்தரகே வத்த, வரிமதிப்பீட்டு இல. 10, 12 மற்றும் 68 ஏ, தபால் அலுவலக வீதி, சிசர பிரியந்த திசாநாயக்கா மற்றும் வேறு ஆள் (தொ. பே. இல. 66703) மற்றும் பகல வீதி ;

கிழக்கு : பகல வீதி மற்றும் பொறலகஸ்தென்ன வரிமதிப்பீட்டு இல. 29, 31 மற்றும் 100, தேவாலய வீதி, பேபி நோனா எதிரிவீர மற்றும் வேறு ஆள் (தொ. பே. இல. 66703) ;

தெற்கு : பொறலகஸ்தென்ன, வரிமதிப்பீட்டு இல. 29, 31 மற்றும் 100, தேவாலய வீதி, பேபி நோனா எதிரிவீர மற்றும் வேறு ஆள் (தொ. பே. இல. 66703), பொறகஸ்தென்ன, பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், (தொ. பே. இல. 66703) ஹுனுகேவத்த (தொ. பே. இல. 66703) மற்றும் தேவாலய வீதி ;

மேற்கு : பூங்கா, பஞ்சதுறயாகே வத்த அல்லது குணந்தரகே வத்த, பதுளை தபால் அலுவலகம்.

**காணித்துண்டு இல. 2 :**

வடக்கு : பகல வீதி மற்றும் சிங்காசனவத்த, வரிமதிப்பீட்டு இல. 115/1, பகல வீதி, டி. எம். பி. சிசிர திசாநாயக்கா (தொ. பே. இல. 66703) ;

கிழக்கு : டி. எம். பி. சிசிர திசாநாயக்கா மற்றும் சிங்காசனவத்த, வரிமதிப்பீட்டு இல. 121 1/2, பகல வீதி, ரி. எஸ். சமரசிங்க (தொ. பே. இல. 66703) ;

தெற்கு : சிங்காசனவத்த, வரிமதிப்பீட்டு இல. 121 1/2, பகல வீதி, ரி. எஸ். சமரசிங்க (தொ. பே. இல. 66703) மற்றும் பகல வீதி ;

மேற்கு : பகல வீதி.

9- 145

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.